**தலைப்பு 258 – கண்டி  மாவட்ட செயலகம்**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 258 – கண்டி  மாவட்ட செயலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கண்டி மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 09 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 09 ஆந்  திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு  சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கண்டி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும்  கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்த லொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் எனது கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களின் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டு பிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

**நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தின் மின்சார முறைமையின் தவறொன்று காரணமாக 2021 ஜனவரி 24 ஆம் திகதி இடம்பெற்ற சேதம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நி.பி 104(4) பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் ரூபா 1,150,332 ஆன நட்டங்கள் சேதங்களின் பெறுமதி மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் நட்டங்கள் மற்றும் விட்டு விடுதல்கள் தொடர்பான கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்களைக கோரும் போதும் சமர்ப்பிக்கும் போதும் இடம்பெற்றுள்ள தொடர்பாடல் பிழையால் தவறுதலாக இந்த நட்டம் நிதிக் கூற்றுகளில் நட்டங்கள் மற்றும் விட்டு விடுதல் தொடர்பான கூற்றில் உள்ளடக்குவதற்கு முடியாதிருந்ததாக | நட்டங்கள் மற்றும் விட்டு விடுதல் சரியாக கணக்கிடப்பட்டு வெளிப்படுத்தப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தெல்தொட்ட பிரதேச செயலகத்தின் புதிய அலுவலக கட்டிட நிர்மாணத்திற்காக ரூபா 93,421,253 ஆன கிரயம் ஒன்று செலவிடப்பட்டு இருந்தது இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன | | |
| (i) வேலைத்தளத்தில் அகழ்வு செய்யப்பட்ட மண் போக்குவரத்துக்காக ஒன்று கண மீற்றருக்காக 11 சதவீதம் வீதம் கூடுதலாக சேர்த்து 4,847,74 கன மீட்டர் போக்குவரத்திற்காக ரூபா 226,098 தொகையும் கொங்கிரீட் தூண் நிர்மாணத்திற்கு 32 மில்லி மீட்டர் சுற்றில் மற்றும் 300 மில்லி மீட்டர் ஆழமாக கல தோண்டப்பட்டு இரும்பு கம்பி இடுவதற்காக 9 சதவீத இலாப விகிதமொன்று கூடுதலாக சேர்க்கப்பட்டு ரூபா 57,940 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இதனை சரிப்படுத்துவதற்கு அடுத்த பிடிகாசிலிருந்து பணம் விடுவிக்கும் போது கழிப்பதாக | ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்டிட விலை விபரங்களில் பிரகாரம் சரியான விலை விபரங்கள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (ii) நிர்மாண வேலைத்தளத்தில் உடைத்து அகற்றிய 278.15 கன மீற்றர் அளவிலான கருங்கல் எவ்வித நடைமுறையின் மறுறும் அங்கீகாரமின்றி வெளியேற்றப்பட்டு ரூபா 78,627 ஆன நட்டம் இடம்பெற்றிருந்தது | வேலைத்தளத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்த102 கியுப் கருங்கல் அளவொன்று பெறுகை செயற்பாட்டினை பின்பற்றி 1 கியுப் ரூபா 800 வீதம் விற்பனை செய்யப்பட்டதாக | பெறுகை செயற்பாட்டினை பின்பற்றி வெளியேற்றப்பட வேண்டும். |
| (iii) 2019 கட்டிட நியம விலை விகித பகுப்பாய்வின் (BSR) பிரகாரம் கருங்கல் உடைப்பதற்கு உரிய இயந்திர உபகரணங்களை போக்குவரத்து செய்வதற்காக 25 கிலோ மீட்டர் வரை செலுத்த வேண்டிய போக்குவரத்து கட்டணம் ரூபா 29,700 ஆக இருந்த போதும் உபகரண போக்குவரத்திற்கு ரூபா 755,745 கொடுப்பனவு செய்யப்பட்டமை காரணமாக ரூபா 726,744 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பில் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு சுயாதீன குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக | நியம விலை விகிதத்தின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (iv) | 2010 ஒக்டோபர் 20 ஆம் திகதிய 02/06/02/09/(viii) - GSMD ஆம் இலக்க சுற்றாடல் அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளாமல் நிர்மாண இடத்தில் அகழ்வு செய்யப்பட்ட 1713 கியூப் மண் நீர்மான இடத்திலிருந்து வெளியே போக்குவரத்து செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக 1713 கியூப் மண்ணுக்காக ரூபா 188,085 ஆன அனுமதிபத்திர வருமானம் ஒன்று இழக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பில் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு சுயாதீன குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | கண்டி மாவட்ட செயலக உத்தியோகபூர்வ இல்லத்தின் அரச வீடமைப்பு தொகுதியில் II ஆம் கட்டத்தில் நிர்மாணிப்பு ஒப்பந்தத்தின் 07 வேலை விடயங்கள் நிறைவேற்றப்படாத வேலைப் பகுதிகளுக்காக மொத்தம் ரூபா 112,208 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இதன் போது கொடுப்பனவு தவறொன்று இடம்பெற்றுள்ளதாக ஏற்றுக் கொள்வதுடன் கருங்கல் சுவரில் 5.82 கன மீட்டருக்காக காக கொடுப்பனவு செய்யாமையால் நிதி நட்டம் ஒன்று இடம்பெறவில்லை என்பதாக | நிறைவேற்றப்படாத வேலைக்காக கொடுப்பனவு பரிந்துரைக்கப்படக் கூடாது |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகளை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 15 ஆம் திகதி ME/NPP/02/2021 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் பாத்த ஹேவா ஹட்ட பிரதேச செயலகத்தினால் செயற்படுத்தப்பட்டிருந்த வாழ்வாதார அபிவிருத்தி செயற் திட்டத்தின் பிரகாரம் 02 பிரிவுகளில் பரீட்சிக்கப்பட்ட 10 நலனாளிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட இரண்டு நலினாலிகளுக்கு ரூபா 366,000 செலவிடப்பட்டிருந்த உள்ளக பூஞ்செடி வளர்ப்பு செய்யப்படாதிருந்தத்துடன் ரூபா 1,281,000 செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டு இருந்த 07 நலனாலிகளின் உள்ளக வீட்டில் சிறியளவில் அந்தூரியம் கன்றுகள் பயிரிடப்பட்டிருந்த போதும் கன்றுகள் விற்பனை செய்யப்பட்டு இருக்கவில்லை. | அலுவலகத்தில் இருந்து வழங்கப்படும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் செயற்படாத நலலாலிகள் இனங் காணப்பட்டு அவர்கள் அவர்களின் வீட்டு பூச் செய்கைக்கு பிரிவில் விருப்பம் தெரிவிக்கின்ற வேறு நலனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வளங்களை செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும் |

## 3.2 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) கிடைக்கப்பெறாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பூஜாப்பிட்டிய பிரதேச செயலகத்தினால் செயல்படுத்தப்படுகின்ற 2021 சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சி திட்டத்தின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட தென்னை மரத்தினை அண்மித்த 13 கைத்தொழில் நலனாலிகள், காளாண் செய்கையை அண்மித்த 08 நலனாலிகள் நாற்று மேடையை அண்மித்த 08 கைத்தொழில் நலனாலிகளில் முறையே 10, 04, 06 நலனாலிகள் அதாவது 77 சதவீதம் 50 சதவீதம் மற்றும் 75 சதவீதமான அளவொன்று கைத்தொழில் இருந்து விலகி இருந்தனர். | கொரோனா தொற்று நிலைமை மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட எரிபொருள் சிக்கல் போன்ற பாரிய பொருளாதார நெருக்கடி நிலைமையில் செயற் திட்டத்தை எதிர்பார்த்த மட்டத்தில் மேற்கொள் வதற்கு முடியாமல் இருந்ததாக | உரிய செயற் திட்டத்தை செயற் திறனாக பேணி செல்லப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டில் செயற்படுத்தப்பட்ட கிராமத்துடன் பிளிசந்தரக் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் அகுரண பிரதேச செயலகத்தினால் உடவெளி கெட்டிய பிரிவில் 15 நலனாலிகள் தொடர்புபடுத்தப்பட்டு ஆடை தொழிற்சாலை ஒன்று நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ரூபா 667,075 செலவிடப்பட்டு 15 ஜக்கி மெஷின்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஆடை தொழிற்சாலை ஒன்று நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் ஒவ்வொரு நபருக்கும் வெவ்வேறாக ஜுகி மெஷின் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 08 நலனாலிகள் இந்த ஜுக்கி இயந்திரங்களை பயன்படுத்தி வியாபாரம் ஒன்றாக நடத்திச் செல்வது அவதானிக்கப்படவில்லை. | பொது இடம் ஒன்று இல்லாத காரணத்தினால் ஆடை தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்க முடியாத இருந்ததாக | திட்டமிடப்பட்டபடி செயற் திட்டங்களை செயற்திறனாக மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | 2021 ஜுலை 15 ஆம் திகதிய SMR/P/DEV(v)/10/03/2021 (பொது) ஒரு கிராமத்திற்கு ஒரு முயற்சியாளரை உருவாக்கும் செயறதிட்டம் மூன்று பிரதேச செயலகங்களில் ஆடை தச்சுத்தொழில், அரைத்தல், சேதன பசளை, காளான் போன்ற துறைகளுக்காக 89 நலனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ரூபா 8,049,708 தொகை செலவிடப்பட்டிருந்தது. நலனாளிகளை | சிக்கலான நிலைமை ஒன்று ஏற்பட்டதால் திட்டம் செயற்படாதிருந்த இருந்த போதும் தற்போது தேவையான பின் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதால் படிப்படியாக செயற்திட்டம் இயங்கும் மட்டத்துக்கு வந்துள்ளது என்பதாக | வளங்கள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | தெரிவு செய்யும் போது காணப்பட்ட பலவீனங்கள் காரணமாக பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நலனாலிகளில் 67 சதவீதம் முதல் 100 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் செயற்திட்டம் வெற்றி அளிக்காமலும் மந்த நிலையிலும் காணப்பட்டன. | | |
| (ஈ) | கண்டி மாவட்ட செயலகத்தின் உத்தியோகபூர்வ இல்ல அரசின் வீட்டு தொகுதியின் கூரையை 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,400,000 செலவிடப்பட்டு 4.08 கிலோவோட் அளவிலான சூரிய சக்தி மின் முறைமையொன்று வழங்கப்பட்டு பொருத்தப்பட்டு 02 ஆண்டுகள் கடந்து இருந்த போதும் சூரிய சக்தி முறைமையில் இருந்து உருவாகும் 4.08 கி.வொ மின்சாரத்தை விற்பனை செய்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை நாளாந்த இடம் பெறும் மின்பிறப்பிப்பு அலகுகள் கணக்கிடப் பட்டு எம்மால் அவதானிக்கப்பட்டதால் துண்டிப்போ அல்லது தவறு ஒன்றை மிக விரைவில் அறிந்து கொள்ளும் முறை ஒன்றுக்கு சென்றுள்ளதாலும் தற்போது அனைத்து தவறுகளும் சீராகப்பட்டுள்ளதால் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக | வளங்கள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும் |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உடதும்பர பிரதேச செயலகத்தின் அரசின் விடுதி ஒன்று மற்றும் பஸ்பாகே கோரல மினிபே மற்றும் அகுரண பிரதேச செயலகங்கள் மூன்றில் பெறுமதி இனங் காணப்படாத 05 கணினி மற்றும் உப பாகங்கள் மற்றும் விதாதா நிலையங்களில் உள்ள 07 சுயதொழில் இயந்திரங்கள் உபகரணங்கள் 01 முதல் 14 வருடங்களுக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் விதாதா நிலையங்களில் விளைவற்று காணப்பட்டன. | பஸ்பாக கோரலே மற்றும் மினிபே பிரதேச செயலகங்களில் 2009 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த உபகரணங்கள் காலாவதியாகிய தொழில்நுட்பத்துடன் உள்ளதாகவும் அடுத்து நடவடிக்கைகள் கைத்தொழில் அமைச்சின் விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாகவும் உடதும்பர பிரதேச செயலகத்தின் உத்தியோகபூர்வ விடுதியை உத்தியோகத்தர்களின் வேண்டுகோளின் பேரில் பயன்படுத்த இயலுமை உள்ளதாக | வளங்கள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும் |

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2014 ஜனவரி 27 ஆம் திகதிய EST/8/ALLOW/03/121 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவலக அமைச்சு செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் பாதீட்டு முன்மொழிவின் பேரில் கிராமிய மட்டத்தில் அபிவிருத்தி செயற்திட்டங்கள் 2022 ஏப்ரல் மாதத்தின் பின்னர் செயற்படுத்தப்படாமல் இருக்கையில் 2022 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் 2023 திசெம்பர் 31 ஆம் வரையான காலப்பகுதியில் மாவட்ட செயலகத்திலும் 17 பிரதேச செயலகங்களிலும் 20 உத்தியோகத்தகர்களுக்கு ரூபா 2,084,000 ஆன விசேட படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | உத்தியோகத்தகர்களுக்கு கிராமிய மட்டத்தில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை கூட்டினைப்பதற்கான 2014 ஜனவரி 27 ஆம் திகதிய EST/8/ALLOW/03/121 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் படிகள் மேற்கொள்ளப்பட்டதாக | சுற்றறிக்கை ஆலோசனைகள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) முன்னைய ஆண்டின் மார்ச் மாதம் ரூபா 923,205 செலவிடப்பட்டு அகுரண பிரதேச செயலகத்தில் புடவை கைத்தொழில் நிலையம் ஒன்றை திருத்தம் செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் கட்டிடம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விலான பல்லேகம பிரிவில் தற்போது காணப்படும் கைத்தொழில் கட்டிடத்தில் ஆடை செயற்திட்டம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக மத்திய மாகாண சபையின் புடவை கைத்தொழில் திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக | கட்டிடங்களை நோக்கத்துக்குட்பட்ட செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும் |
| (இ) பூஜாபிட்டிய பிரதேச செயலகத்தினால் ஆடை தொழிற்சாலை ஒன்றை நடத்திச் செல்வதற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 915,758 தொகை செலவிடப்பட்டு பள்ளிய கொட்டுவ வீதி பாடசாலை கட்டிடம் திருத்தம் செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டின் கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவல்கள் அமைச்சிலிருந்து கிடைத்த தையல் இயந்திரங்கள் இக்கட்டிடத்தில் கொண்டு வந்து களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. எனினும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் தையல் கைத்தொழில் ஆரம்பிக்கப்படாமை காரணமாக தையல் இயந்திரங்கள் மற்றும் கட்டிடம் விளைவற்று காணப்பட்டன. | ஆடை கைத்தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்னர் அந்த இடத்தின் பாதுகாப்பிற்கு பாதுகாப்பு வேலியொண்று நிர்மாணித்தல் மற்றும் ஆரோக்கிய வசதிகள் மற்றும் நீர் வசதிகளை வழங்கும் தேவை உள்ளதாக | சரியாக திட்டமிடப்பட்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) பூஜாபிட்டிய பிரதேச செயலகத்தினால் பள்ளேகம பிரதேசத்தில் உற்பத்தி விற்பனை நிலையம் ஒன்றை ஆரம்பிப்பதற்காக ரூபா 1,873,064 தொகை செலவிடப்பட்டு கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் கட்டிடம் நோக்கத்துக்குட்பட்ட செயற்பாட்டுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | அதன் கூரை வீதி மிகவும் காண்பிக்க காட்சிப்படுத்த முடியாமல் அடிப்படையில் விற்பனை நிலையம் ஒன்றாக பேணி செல்வதற்கு பொருத்தமற்றது என | சரியான சாத்திய வளஆய்வு ஒன்று மேற்கொண்டு முன் திட்டமிடப்பட்டு செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டும் |
| (உ) வரவு செலவுத் திட்டத்தில் ஒரு லட்சம் வேலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பூஜாபிட்டிய பிரதேச செயலகத்தில் மூடப்பட்டுள்ள பாடசாலை கட்டிடம் முன்னைய ஆண்டின் போது ரூபா 1,200,000 செலவிடப்பட்டு அபிவிருத்தி செய்து கைத்தொழில் மற்றும் வர்த்தக அலுவலல் அமைச்சின் கீழ் ஆடைகளுடன் அண்மித்த சிறு கைத்தொழில் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் கிடைத்திருந்த இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை பயன்படுத்தி ஆடை தொழிற்சாலை ஒன்று ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் அடைக்களர்ச்சியாளர் அன்று ஆரம்பிக்கப்படாமை காரணமாக குறித்த உபகரணங்கள் மற்றும் கட்டிடங்கள் விளைவற்று காணப்பட்டன. | எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாததால் நிதி ஏற்பாடு கிடைத்த பின்னர் அடுத்து வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக | சாத்தியவள ஆய்வு ஒன்று மேற்கொண்டு செயற்திட்டத்தை சரியாக திட்டமிட்டு செயல்படுத்தப்பட வேண்டும் |
| (ஊ) 2021 சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் மினிபே பிரதேச செயலகத்தினால் புலத்வெல்குமுபுற கிராம சேவையாளர் பிரிவில் குறைந்த வருமானம் உடைய 33 குடும்பங்களை கேந்திரமாகக் கொண்டு மா அரைக்கும் கைத்தொழிலொன்றை ஆரம்பிப்பதற்காக மா தயாரிக்கும் நிலையக் கட்டிடம் ஒன்றை நிர்மாணித்தல், காயவைக்கும் இயந்திரம் ஒன்று மற்றும் 33 நலனாலிகளுக்கு 33 மா அரைக்கும் இயந்திரங்கள் வழங்குவதற்காக ரூபா 4,652,567 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2024 பெப்ரவரி 27 ஆம் திகதி மேற்கொண்ட பௌதீக பரிசோதனையின் பிரகாரம் மா தயாரிக்கும் நிலையத்தில் உரிய உலர்த்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 2,920,067 ஆன தொகை விளைவற்ற செலவினமாக மாறி இருந்தது. | 33 நலனாலிகளுக்காக உள்ள மா தயாரிக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்த போதும் செயற்திட்ட திட்டமிடலானது நலனாலிகள் வீட்டில் அரசி உற்பத்தி செய்து மா சேகரிக்கும் நிலையத்திற்கு கொண்டு வந்ததன் பின்னர் உலர்த்தும் இயந்திரத்தின் மூலம் உலர்த்தி நீண்ட காலம் வைக்கக் கூடிய வகையில் சந்தைக்கு வழங்குவதாகும். எனினும் அவ்வாறு செய்யப்படாததன் காரணமாக வீட்டில் பொருத்தப்பட்ட இயந்திரங்களுக்கு அருகில் உள்ளோர் எடுத்துச் சென்று அரிசி தானியங்களை மாத்திரம் அரைத்தமையால் | வளங்களை செயற்திறனாக பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவர்களுக்கு மாதாந்தம் ரூபா 800 அளவிலான வருமானத்தை பெற்றுக் கொள்வதாக | |

3.8 **முகாமைத்துவ பலவீனங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | கண்டி மாவட்டத்தின் 20 பிரதேச செயலகங்களில் 20 ஓய்வு ஓய்வூதியம் பெறுவோருக்கு 01 ஆண்டு முதல் 19 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அடிப்படைச் சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவின படிகளாக ரூபா 55,001,651 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் அதில் ரூபா 28,702,753 மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | கூடுதலான கொடுப்பனவுக்கு இடையே 75 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவு இராணுவ ஓய்வூதிய கொடுப்பனைவின் போது இடம்பெற்ற தவறு ஒன்றாகவும் அது தொடர்பாக இராணுவ தளபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுவதுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் | கூடுதலாக ஓய்வூதியக் கொடுப்பனவு செய்வதை தவிர்ப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை பலப்படுத்துவதற்கும் கூடுதலான கொடுப்பனவை மிக விரைவில் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2011 ஜூன் 06 ஆம் திகதிய 05/2011 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டின் போதும் வெளிநாட்டில் உள்ள ஓய்வூதியம் பெறுவோருக்கு வாழ்க்கைச் செலவின படிகள் மற்றும் விசேட படிகளாக 14 பிரதேச செயலங்களின் ஓய்வூதியம் பெறும் 118 பேருக்கு ரூபா 3,310,244 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 11 பிரதேச செயலகங்களின் ஓய்வு பெற்ற 79 பேரிடமிருந்து ரூபா 1,587,895 தொகை அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்டது. | தற்போது வெளிநாடு சென்றுள்ள ஓய்வூதிய இடைநிறுத்த செய்யப்பட்டுள்ள போதும் அவர்கள் எதிர்காலத்தில் இலங்கைக்கு வந்ததன் பின்னர் ஓய்வூதியத்தை செயல்படுத்தும் போது இந்த அறவீடுகள் மேற்கொள்வதாக | கூடுதலான கொடுப்பனவை தவிர்ப்பதற்கு உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை பலப்படுத்துவதற்கும் கூடுதலான கொடுப்பனவை மிக விரைவில் தீர்வு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 15 பிரதேச செயலகங்களில் காணி கையேற்றல் மற்றும் காணி கையளிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக 350 கோவைகளின் தெரிவு பரிசோதனையின் போது கோவைகள் ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முதல் 40 ஆண்டுகள் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதும் காணி கையேற்றல் அல்லது காணி கையளிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருக்கவில்லை. | காணி கையேற்பு மற்றும் காணி கையளிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக வெவ்வேறு தரப்பினர் தொடர்புபடுவதால் இந் நடவடிக்கைகள் தாமதிக்கப்பட்டுள்ளதாகவும் உரிய தரப்பினர் அறிவுறுத்தப்பட்டு கையேற்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | காணி கையளிப்பு மற்றும் கையேற்பின் போது உருவாகியுள்ள சிக்கல்களை இனங் கண்டு சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கண்டி மாவட்டத்தில் அதிக மண் சரிவு ஆபத்து நிலைமையில் உள்ள 20 பிரதேச செயலகங்களில் 1845 குடும்பங்கள் இனங்காணப்பட்டு இருந்ததுடன் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் 1386 குடும்பங்கள் அதி ஆபத்துள்ள பிரதேசத்தில் குடியிருப்பது அவதானிக்கப்பட்டது. | நீண்ட காலமாக குறித்த இடங்களில் எவ்வித அனர்த்த நிலைமை இல்லாமை மற்றும் அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் குடியிருக்கும் பிரதேசத்துக்கு அண்மித்த இடங்களில் மேற்கொள்ளப்படுவதால் அந்த வீடுகளில் இருந்து வெளியேறுவதற்கு விருப்பமில்லை என்பதாகவும் என்பதாக பிரதேசவாசிகள் குறிப்பிட்டுள்ளனர். அதன் பிரகாரம் தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பிற்கு இது தொடர்பாக மீண்டும் கணிப்பீடொன்றை மேற்கொண்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளதாக | மீள்குடியேற்றத்தின் போது உருவாகும் சிக்கல்களை இனங் கண்டு சிக்கல்களுக்கு தீர்வுகள் வழங்கி ஆட்களின் வாழ்வாதார ஆபத்தினை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2021 ஆகஸ்ட் 27 ஆந் திகதி விபத்துக்கு உட்பட்ட தும்பனே பிரதேச செயலகத்தின் கெப்வண்டி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நி.பி 104 (4) பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் அதன் சாரதியிடமிருந்து ரூபா 84,444 தொகையை அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நி.பி 104 (4) பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் நட்டத்தை சாரதியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் சேவையை விட்டுச் சென்றுள்ள சாரதி மற்றும் அவரின் மனைவி வெளிநாடு சென்றுள்ளதால் நட்டத்தை அறவிட முடியாமல் இருப்பதாக | குறித்த பணத்தை விரைவில் அறவிடுவதற்கு சட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |

## 5. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கண்டி மாவட்ட செயலகம் மற்றும் 20 பிரதேச செயலங்களில் 2023 திசெம்பர் 31 உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை உள்ளவரான பதவியணியினர் எண்ணிக்கை மற்றும் ஒப்பிடும் போது 376 வெற்றிடங்கள் மற்றும் 362 மிகைகள் காணப்பட்டன. | மிகைகள் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பாக பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவலக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சிக்கும் நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக | மிகை ஊழியர்கள் மற்றும் தொடர்புடைய பொது நிர்வாக அமைச்சிற்கு தெரிவிப்பதற்கும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |